**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.77/2017**

2025=ம் ஆண்டு ஜூலை மாதம் 29ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 பாக்கியலட்சுமி வயது 63, க/பெ சுகுமார்**

**குறுக்கு விசாரணை (3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பு)**

நானும் மற்ற வாதிகளும் சேர்ந்து முதல் மற்றும் 3ம் பிரதிவாதியிடமிருந்து தாவா பி செட்யூல் சொத்தை கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். மேற்படி கிரையம் 4ம் பிரதிவாதி பவர் ஏஜென்ட் முன்னிலைக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கிரையம் வாங்கிய தேதியிலிருந்து நானும் மற்ற வாதிகளும்தான் தாவா பி செட்யூல் சொத்தை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்.

2. எங்கள் ஊரை சேர்ந்த முதல் பிரதிவாதி என்.எஸ்.பாஸ்கரன் என்பவர் மேற்படி சொத்து சம்மந்தமாக கனம் இந்நீதிமன்றத்தில் O.S. 509/2004 வழக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் நானும் மற்ற வாதிகளும் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தை நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றாலும், 1ம் பிரதிவாதி பொய்யான சங்கதிகளை கூறி அவ்வழக்கை தாக்கல் செய்தது செல்லாது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது.

3. மேற்படி வழக்கில் நாங்கள் தரப்பினராக இல்லாததால் அவ்வழக்கின் தீர்ப்பு எங்களை கட்டுப்படுத்தாது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arni.